Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
**C.C.No. 15/2024**

**Deposition of witness for: PW - 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | **:** | செல்லதுரை | **Father/Husband Name** | : | சிவனாகோனார் |
| **Age** | | | **Calling** | : | |
| **Date** | **:** | **29.07.2025** | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 29th day of July 2025.

**(**சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது**)**

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் அ.வள்ளாலபட்டியில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். சாட்சி வெள்ளையனை எனக்கு தெரியும். அசா1 சரஸ்வதியை தெரியும். வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது உறவினர்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது.

**அரசுதரப்பில் அசா1 யை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி கோரப்பட்டு அரசுதரப்பில் குறுக்குவிசாரணை**

கடந்த 04.04.2011 ம் தேதி காலை 11.00 மணிக்கு நானும், சாட்சி வெள்ளையனும் வழக்கின் சம்பவ இடத்தில் இருந்து பேசிக்கொண்டிருந்தோம் என்றும், அப்போது மேலவளவு குற்ற எண்

40/2011, வழக்கின் சம்பவ இடத்தை நிலைய சார்பு ஆய்வாளர் பார்வையிட்டு பார்வை மகஜர் தயார் செய்தார் என்றும், அதில் நான் 2 வது சாட்சி கையொப்பம் செய்தேன் என்றும், என்னுடன் சேர்ந்து வெள்ளையனும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும், இது சம்மந்தமாக போலீசார் விசாரித்தார்கள் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் எனது  உறவினர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.